பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 04 2024 6 45

புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- சென்னை நகரின் வளர்ச்சியில் திமுக அக்கறை செலுத்தவில்லை என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

- பிஜேபி தலைமையிலான மத்திய அரசு புலனாய்வு அமைப்புகளை தவறாகப் பயன்படுத்தி வருகிறது என திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

- அஇஅதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்களை திமுக அரசு நிறுத்தியுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

- மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் வாக்குச்சாவடிகளில் வசதிகளை ஏற்படுத்துமாறு தேர்தல் அலுவலர்களுக்கு தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதா சாஹூ அறிவுறுத்தியுள்ளார்.

- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 2 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

*----- இனி விரிவான செய்திகள் --*

<<<<>>>>

சென்னை நகரின் வளர்ச்சியில் திமுக அக்கறை செலுத்தவில்லை என்று பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று வாகனப் பேரணி மேற்கொண்ட பின் சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக சென்னை மக்களிடம் வாக்குகளை பெற்றபோதும் இந்நகர மக்கள் மீது திமுக கவனம் செலுத்தவில்லை என்று தெரிவித்துள்ளார்.

சாலைகள், துறைமுகங்கள், நகர்ப்புற போக்குவரத்து போன்றவற்றை மேம்படுத்த தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பணியாற்றி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளம் போன்ற பேரிடர்களின்போது சென்னை எதிர்கொள்ளும் சிக்கல்களைக் களைய பிஜேபி முக்கியத்துவம் அளிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

தமிழ்க் கலாச்சாரத்திற்கு பிஜேபி மிகுந்த மரியாதை அளிப்பதாகவும், உலக அரங்கில் தமிழ்க் கலாச்சாரத்தையும், மொழியையும் பிரபலப்படுத்த தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கப்பட்ட டிடி தமிழ் தொலைக்காட்சி அலைவரிசை, மாநிலத்தின் சிற்பபான கலாச்சாரத்தை கொண்டாடுவதில் தொடர்ந்து உறுதுணையாக செயல்படும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதனிடையே வேலூர் மற்றும் மேட்டுப்பாளையத்தில் திரு. நரேந்திர மோடி இன்று பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார்.

<<<<>>>>

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு புலனாய்வு அமைப்புகளை தவறாகப் பயன்படுத்தி வருகிறது என திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

மதுரையில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், கல்விக்கும், மருத்துவத்திற்கும் திமுக அரசு முக்கியத்துவம் அளித்து செயல்படுவதாகக் கூறினார்.

எந்தவொரு மதத்திற்கும் திமுக எதிரானது அல்ல என்றும் அவர் கூறினார்.

கடந்த 3 ஆண்டுகளில் மாநிலத்தில் ஆயிரத்துக்கும் 500க்கும் மேற்பட்ட திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு விழா நடத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மத்திய அரசு தொடர்ந்து சிக்கல்களை ஏற்படுத்தி வருவதாக திரு. மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

அஇஅதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்களை திமுக அரசு நிறுத்தியுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

திண்டுக்கல் மற்றும் தேனியில் நேற்று அவர் பிரச்சாரம் மேற்கொண்டார்.

முதியோர் உதவித்தொகை, அம்மா மினி கிளிக்குகள், மாணவ-மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டம், தாலிக்குத் தங்கம் போன்ற பல்வேறு திட்டங்களை திமுக அரசு கைவிட்டுள்ளதாக அவர் கூறினார்.

விவசாயிகளின் நலனில் அஇஅதிமுக அதிக அக்கறை செலுத்துவதாக அவர் கூறினார்.

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த அஇஅதிமுக அரசுதான், சட்டப் போராட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுத்தது எனவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் வாக்குச்சாவடிகளில் வசதிகளை ஏற்படுத்துமாறு தேர்தல் அலுவலர்களுக்கு தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதா சாஹூ அறிவுறுத்தியுள்ளார்.

தேர்தலுக்கான வழிகாட்டும் குழுவின் நான்காவது குழுக் கூட்டம் சென்னையில் அவரது தலைமையில் நேற்று நடைபெற்றது.

வாக்குச்சாவடிகளில் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்வது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

குடிநீர் வசதி, சக்கர நாற்காலிகள், சாய்தளம் உள்ளிட்ட வசதிகளை உரிய முறையில் ஏற்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்று திரு. சத்யபிரதா சாஹூ அறிவுறுத்தினார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் தேர்தல் ஆணையத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் மாவட்டம்தோறும் இது தொடர்பான நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

முதல்முறை வாக்காளர்களுக்காக வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து சேலத்தில் ஓவியப் போட்டி நடத்தப்பட்டது.

இது பயனுள்ளதாக அமைந்தது என்று அதில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

மயிலாடுதுறை காஞ்சிவாய் பகுதியில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் சுற்றித் திரியும் சிறுத்தையைப் பிடிக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனத்துறை தெரிவித்துள்ளது.

கண்காணிப்பு பணிகள் தொடர்ந்து நடைபெறுவதாக மாவட்ட வன அலுவலர் திரு. அபிஷேக் தோமர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அயர்லாந்து நாட்டின் புதிய பிரதமராக திரு சைமன் ஹாரிஸ் நேற்று பொறுப்பேற்றார்.

<<<<>>>>

கர்நாடக மாநிலம் கார்வார் கடற்படை தளத்தில் புதிய கட்டமைப்புகளை கடற்படை தளபதி அட்மிரல் ஹரிக்குமார் திறந்து வைத்தார்.

<<<<>>>>

ராணுவ துணைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் உபேந்திர திவேதி சென்னையில் உள்ள தென்மண்டல ராணுவ தலைமையகத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே மேற்கொள்ளப்பட்ட வாகன சோதனையின்போது ஆந்திராவில் இருந்து கடத்தி வரப்பட்ட 92 கிலோ குட்கா பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபால சுவாமி ஆலய பங்குனித் திருவிழாவின் 14-ம் நாளான நேற்று இரவு, யானை வாகனத்தில் சுவாமி வீதி உலாவும் பின்னர் திருக்கல்யாணமும் நடைபெற்றது.

<<<<>>>>

முதுமலை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட சிங்காரா வனப்பகுதியில் 6 வயது காட்டு யானை உயிரிழந்தது குறித்து வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள புகழ்பெற்ற கூவாகம் கூத்தாண்டவர் கோவில் திருநங்கைகள் திருவிழா நேற்று மாலை கொடியேற்றம் சாகை வார்த்தல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது.

<<<<>>>>

கோடை விடுமுறையையொட்டி மே மாத இறுதி வரை, நெல்லை - சென்னை இடையே வியாழக்கிழமைகளிலும், சென்னை – நெல்லை இடையே வெள்ளிக் கிழமைகளிலும் சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்தி*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 2 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

மொஹாலியில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 182 ரன் எடுத்தது.

183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணி 6 விக்கெட் இழப்புக்கு 180 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

ஜெய்ப்பூரில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ளது.

<<<<>>>>